**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 193/2024 |
| Deposition of Witness | : | PW– 6 |
| Name | : | விவேகானந்தன் |
| Father Name | : | ரவிக்குமார் |
| Village | : | துடியலூர் |
| Taluk | : | கோவை |
| Age | : | 49 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.08.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவை மண்டலம், துடியலூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வளராக உள்ளேன்.

2. கடந்த 29.04.2024 ஆம் தேதியன்று மாலை 16.00 மணிக்கு காங்கேயம் காவல் நிலைய முதல் நிலைக் காவலர் திரு.பாலமுருகன் நிலைய அலுவலில் இருந்தபோது கரிகாலன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப காங்கேயம் காவல் நிலையக் குற்ற எண். 227/2024 – U/S: 279, 337 IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் அதன் நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. கார்த்திக்குமார் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இவ்வழக்கு கோப்பை திரு.கார்த்திக்குமார் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 29.04.2024 ஆம் தேதியன்று மாலை 17.30 மணிக்கு சம்பவ இடத்தை ஆஜர் சாட்சிகள் சக்திவேல் மற்றும் ஜெகநாதன்

ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. மேலும், சாட்சிகள் ஆஜர் சாட்சிகள் சக்திவேல், ஜெகநாதன் மற்றும் செல்வராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் கடந்த 01.05.2024 ஆம் தேதி சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் தமிழரசன் என்பவரின் இறப்பு இண்டிமேசன் பெற்று காலை 6.30 மணிக்கு இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 IPC வில் இருந்து 279, 337, 304(A) IPC ஆக சட்டப்பிரிவினை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். இவ்வழக்கு கோப்பினை மேல் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.விவேகானந்தன் ஆகிய எனது பார்வைக்கு வைத்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6. பின்னர் இவ்வழக்கு கோப்பினை நான் எனது தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 01.05.2024 ஆம் தேதி சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று வழக்கில் இறந்துபோன தமிழரசன் என்பவரது பிரேதத்தை பார்வையிட்டு ஆஜர் பஞ்சாயத்துகாரர்களுக்கும் சாட்சிகளுக்கும் முறைப்படி சம்மன் சார்வு செய்து சவக்கிடங்கிற்கு முன்பாக வைத்து காலை 10.30 மணியில் இருந்து மதியம் 12.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்னர் சாட்சிகள் லோகாம்பாள், மையூரி, திவ்யபாரதி, தேவி, கரிகாலன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இறந்துபோன தமிழரசன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனைக்காக முதல் நிலைக்காவலர் மகேஷ்வரன் என்பவர் மூலமாக மதியம் 12.40 மணிக்கு சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம்

தக்க வேண்டுகோள் கடிதத்துடன் ஆஜர்படுத்தியும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். **(இறந்துபோன தமிழரசன் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7. பின்னர் கடந்த 07.05.2024 ஆம் தேதி மதியம் 14.30 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி மலையாளி என்பவரை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

8. இவ்வழக்கில் கடந்த 07.05.2024 ஆம் தேதியன்று விபத்தை ஏற்படுத்திய TN 37 F 4104 என்ற பதிவு எண் கொண்ட மாருதி 800 வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தினேன். மேலும், கடந்த 09.05.2024 ஆம் தேதி விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 42 U 6820 என்ற பதிவு எண் கொண்ட Hero Splender Pro Drum இருசக்கர வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தினேன். கடந்த 21.06.2024 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வறிக்கைச் சான்றுகள் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 37 F 4104 என்ற பதிவு எண் கொண்ட மாருதி 800 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், TN 42 U 6820 என்ற பதிவு எண் கொண்ட Hero Splender Pro Drum இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

9. பின்னர் இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட சாட்சி அப்புக்குட்டி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தும், விபத்து பதிவேடு அறிக்கை பதிவு செய்தும் தொடர் சிகிச்சை அளித்தும் அவரது காயத்தன்மை குறித்து காயச்சான்று வழங்கிய ஈரோடு லோட்டஸ் மருத்துவமனை மருத்துவர் ஜான்குருபாதம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று நகல்கள் பெற்றேன். மேலும் வழக்கு விபத்தில் இறந்துபோன தமிழரசன் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தும், விபத்து பதிவேடு அறிக்கை பதிவு செய்தும், காவல் துறைக்கு

இண்டிமேசன் வழங்கிய சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் தமையந்திராணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். இறந்துபோன தமிழரசன் என்பவருக்கு தொடர் சிகிச்சை அளித்து இறப்பை உறுதி செய்து இறப்பு இண்டிமேசன் வழங்கிய சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் பொன்னையன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இறந்துபோன தமிழரசன் என்பவர் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனை தடவியல் மருத்துவத்துறை மருத்துவர் கோகுல்ராம் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். **(காயம்பட்ட சாட்சி அப்புக்குட்டி என்பவரின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆகவும், இறந்த தமிழரசன் என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.11 ஆகவும், இறப்பு இண்டிமேசன் அ.சா.ஆ.12 ஆகவும் மற்றும் இறந்த தமிழரசன் என்பவரின் பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

10. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலைக்காவலர் திரு. முருகேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அப்புக்குட்டி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337, 304(A) IPC வில் இருந்து 279, 338, 304(A) IPC ஆக சட்டப்பிரிவினை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

11. பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 279, 338, 304(A) IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த ரோடானது தேதிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். எதிரி வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தார் என்றால் சரிதான். வாகன ஓட்டுநர் ரோட்டை

மேற்கில் இருந்து கிழக்காக ரோட்டைக் கடக்கும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இறந்துபோன தமிழரசன் 29.04.2024 ஆம் தேதி மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். தமிழரசன் மூன்று நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றால் சரிதான். முதலுதவி அளித்த மருத்துவர் சரியான சிகிச்சை அளிக்காததால்தான் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தின் அருகே மதுபான கடை உள்ளது என்றால் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை. விபத்தில் இறந்தவர்தான் ரோட்டினை இருபுறமும் கவனிக்காமல் ரோட்டைக்கடந்து வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.10 17:19:47 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்